வேறுபட்ட நெறியாள்கை அணுகுமுறைகளும் நெறியாள்கை நோக்கு நிலையும் : யாழ்ப்பாண அரங்க ஆற்றுகைகளினை அடிப்படையாக கொண்ட ஆய்வு

கீதாஞ்சனா, ஜெ., ரதிதரன், க.
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
keethajeyam@gmail.com

ஈழத்து தமிழ் நாடக அரங்கில் எழுந்துள்ள நாடகங்களின் நெறியாள்கை முறைமையில் காலவோட்டத்தில் நெறியாளர்களினால் மாற்றங்கள் ஏற்படுத் தப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வானது, ஈழத்து தமிழ் நாடக அரங்கில் சம கால அரங்கப் படைப்புகளில் நெறியாள்கை முறைமையின் போதாமையை பிரச்சினையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமகால நாடக நெறியாள்கை முறைகள் எவை? நெறியாள்கையில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன? ஏன் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? என்ற ஆய்வு வினாக்களுக்கான பதில்களை தேடுவதாக ஆய்வானது அமையப்பெற்றுள்ளது. மேலும் வேறுபட்ட நெறியாள்கை முறைகளினை ஆராய்ந்து, அதற்கான காரணங்களைக் கண்டறிவதன் மூலம் அரங்க ஆற்றுகைகள் எழுந்த ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிகழ்ந்துள்ள ஆற்றுகைகளை இனங்கண்டு அவற்றின் நெறியாள்கை முறைமைகளை அறிவதுடன், சமகாலத்தில் அரங்கு எவ்வாறு இயங்குகின்றது என்பதனையும் ஆராய்வதாக இது அமைந்துள்ளது. இது பண்புசார் அணுகுமுறையில் நோக்கப்பட்டு, நேர்காணல் மற்றும் ஆற்றுகைகளை அவதானிப்பு என்பன மூலம் தரவுகளைத் திரட்டி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஈழத்து தமிழ் அரங்க ஆற்றுகைகளின் நெறியாள்கையினை ஆராய்கின்ற போது பாரம்பரிய அரங்கில் நாடகமானது இலக்கியமாக எழுதப்பட்ட நிலையில் கொண்டு வரப்படுகின்றது. அவ்விலக்கியமானது எழுத்துருவாக்கப்பட்டு, நாடகமாக மேடையேற தொடங்கியதி லிருந்து, எழுத்துருக்களினை அடிப்படை யாகக் கொண்ட நெறியாள்கை முறைமையே ஈழத்துத் தமிழ் நாடக அரங்கிலே காணப்பட்டது. அம்முறைமையானது கால வோட்டத்திலே மாற்றமடைந்து வருவதினை அவதானிக்க முடிகிறது. நாடகத்திற்கான எழுத்துருக்கள் உருவாக்கப்படுகின்ற முறையிலே மாற்றங்கள் ஏற்படுவதுடன், சமகால நாடக நெறியாள்கையில் பல புதிய விடயங்கள் இணைக்கப்பட்டும், சில விடயங்கள் தவிர்க்கப் பட்டும், நெறியாள்கை முறையானது மாற்றமடைந்து வருவதினையும் அவதானிக்க முடிகிறது. நாடக நெறியாள்கை முறையிலே எழுத்துரு நீக்கப்பட்ட நெறியாள்கையானது சமகால நெறியாளர்களினால் அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. அது சார்ந்த தகவல்களும் காரணங்களும் ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, ஆய்வினூடாக பெறப்பட்ட பெறுபேறாக வேறுபட்ட நெறியாள்கை முறைகளினை ஆராய்ந்ததன் மூலம் காலப்பின்னணி நெறியாள்கை முறையில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கான முக்கியமான ஒரு காரணியாக அமைப்பெற்றுள்ளமையினையும் காலத்தின் தேவையும் பார்வையாளர்களுக்கு அவசியமானது எது என்பதனையும் நோக்கியே நெறியாளர்களது நாடக நெறியாள்கை முறைமைகள் நகர்ந்துள்ளன என்பதையும் கண்டறிய முடிகின்றது. இதனை அடித்தளமாக கொண்டு எதிர்காலத்தில் நாடகங்களை அடுத்தகட்ட நிலைக்கு கொண்டுசெல்வதற்கு இவ் வாய்வானது துணை புரிவதுடன், அரங்க ஆற்றுகைகளை நெறிப்படுத்தும் நெறியாளர் களுக்கும் நாடக கலைஞர்களுக்கும் ஈழத்து அரங்க வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களினை இனங்காட்டுவதாக இவ்வாய்வானது அமையப் பெற்றுள்ளது.

திறவுச்சொற்கள் :அரங்கு, அளிக்கைமுறை, செயல்முனைப்பு, படைப்பாக்கம், தீராத்தேடல்.